# பாடம் 14 அடிமையான யோசேப்பு (ஆதி 37:39)

எப்பொழுதாவது, தேவன் நீங்கள் எதை செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ அதைச் செய்ய தீர்மானித்தது உண்டா? அதை நீங்கள் செய்ய ஆரம்பித்தவுடனே வாழ்க்கையிலே எல்லாம் தவறாகி விடுகிறதா? இன்றைய பாடத்தில் இதே போல பிரச்சினையையுடைய ஒரு வாலிபனின் வாழ்க்கையை குறித்து பார்ப்போம். அவன் தன் சகோதரர்கள் செய்த தவறை உண்மையாய்ச் சொன்னதும் தன்னைக் கொண்டு தேவன் என்ன செய்யப் போகிறார் என்பதை பற்றி கூறியதும் அவனது வீட்டிலே அதிகமான பிரச்சினைகளை உண்டாக்கியது.

யாக்கோபின் 11-வது மகனாகிய யோசேப்பைக் குறித்த நான்கு பாடங்களில் இது முதலாம் பாடம். முழுக் குடும்பத்தையும் காப்பாற்ற தேவன் மிகவும் கடினமான சூழ்நிலைகளிலும் எப்படி ஒரு நபரை பயன்படுத்துகிறார் என்பது மிகவும் ஆச்சரியமான காரியம். யாக்கோபுக்கு பிறந்த கடைசி குமாரனாகிய பென்யமீன்தான், யோசேப்பின் உடன் பிறந்த ஒரே சகோதரன். யோசேப்பு எகிப்திலே இருந்த போது அவன் பிறந்தான்.

அவனுடைய தாயாகிய ராகேல் இவனைப் பெற்றெடுக்கும் போது மரித்து பெத்லகேமுக்கு அருகிலே அடக்கம் பண்ணப்பட்டாள்.

யாக்கோபு தன்னுடைய செல்லப்பிள்ளையான யோசேப்பை மிகவும் நேசித்ததினால் அவனுக்கு தன் அன்பின் அடையாளமாக பலவர்ண விசேஷ அலங்காரமான அங்கியை அவனுக்கு உடுத்துவித்தான். இந்த விசேஷமான செல்லப்பிள்ளையாயிருப்பது அவனுடைய மற்ற சகோதரருக்கு அவன் மீது பொறாமையை உண்டாக்கியது. யோசேப்பு தன் சகோதரர்களுடைய தவறான செயல்களை தன் தகப்பனிடத்தில் சொல்லும் போதெல்லாம் இந்தப் பொறாமை வளர்ந்து கொண்டே வந்தது.

யோசேப்புக்கு 17 வயதான போது அவன் கண்ட வித்தியாசமான சொப்பனத்தை அவன் தன் குடும்பத்தாரோடு பகிர்ந்து கொண்ட போது அது மிகவும் மோசமான சூழ்நிலையை உண்டாக்கியது. ஒரு கனவினைப் பற்றி அவன் கூறும் போது “நாமெல்லாம் வயலிலே அரிக்கட்டுகளை கட்டிக் கொண்டிருந்தோம். அதிலே என்னுடைய அரிக்கட்டு மாத்திரம் நிமிர்ந்து நின்றது. உங்கள் அரிக்கட்டுகள் அதை சுற்றிலும் தாழ விழுந்து பணிந்து கொண்டது” என்றான். இதனால் கோபம் கொண்ட அவன் சகோதரர்களுக்கு யோசேப்பு தங்களை

ஆளப் போகிறான் என்பதை கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை.

மேலும் யோசேப்பு இரண்டாவது கனவினைக் குறித்து கூறும் போது "சூரியனும் சந்திரனும் 11-நட்சத்திரங்களும் என்னை வணங்கியது" என்றான். அவனுடைய தந்தையும் கூட அவனிடம் " என்ன உன் தாயும் நானும் கூட உன்னை வணங்குகிறோமா?" என்றான். பின்னர் யாக்கோபு இவை எல்லாவற்றையும் தன் மனதிலே நினைவு வைத்து கொண்டான்.

சில நாட்கள் சென்ற பிறகு பத்து மூத்த சகோதரர்களும் மந்தையை மேய்ப்பதற்காக வீட்டை விட்டு தூரமாய் பிரயாணம் போனார்கள். யாக்கோபு தன் மகனாகிய யோசேப்பை மற்றவர்களின் நலம் விசாரிக்கும்படி அனுப்ப வேண்டும் என்று தீர்மானித்தான்.

யோசேப்பு தூரத்திலே வருகிறதை அவன் சகோதரர்கள் பார்த்தவுடனே "இதோ சொப்பனக்காரன் வருகிறான்" என பரிகாசம் பண்ணினார்கள். மேலும், "அவனது சொப்பனங்களை முடித்து விடுவோம். நாம் அவனைக் கொன்று பள்ளத்திலே எறிந்து விட்டு ஒரு துஷ்ட மிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லிவிடலாம். அப்பொழுது அவன் சொப்பனங்கள் என்னவாகும் என்று பார்ப்போம்" என்றார்கள்.

அப்பொழுது சகோரர்களில் மூத்தவனாகிய ரூபன் மறுத்து மற்றவர்களை பார்த்து, "அவனைக் கொன்று அவன் இரத்தப் பழியைச் சுமக்க வேண்டாம். இந்த நீரில்லாத பாழுங் கிணற்றிலே அவனை எறிந்துவிடலாம்" என்றான். ஏனென்றால் அவனுக்கு, பின்னர் வந்து யோசேப்பை காப்பாற்றி வீட்டிலே சேர்க்க வேண்டும் என்பது திட்டமாய் இருந்தது. சகோதரர்கள் அதை ஏற்றுக் கொண்டு யோசேப்பின் அங்கியைக் கழற்றி அவனை பாழுங் கிணற்றிலே எறிந்துவிட்டார்கள்.

ரூபன் மற்ற வேலையாய் வெளியே போயிருந்த சமயத்திலே அவர்களெல்லாம் சாப்பிடும்படி அமர்ந்தார்கள். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது எகிப்துக்குப் போகிற வியாபாரிகள் தங்கள் வாகனங்களில் அந்த வழியாக வந்தார்கள்.

அப்பொழுது யூதா, "நாம் ஏன் யோசேப்பை கொல்ல வேண்டும். அவன் நம்முடைய இரத்தமும் நம்முடைய மாம்சமுமாயிருக்கிறானே, அவனை விற்றுப் போடலாம்" என்று மற்றவருக்கு ஆலோசனை

கூறினான். எனவே அவர்கள் அவனை 20 வெள்ளிக்காசுக்கு அந்த வியாபாரிகளிடம் விற்றுப் போட்டார்கள். ரூபன் திரும்பி வந்து பார்க்கும் போது யோசேப்பைக் காணாமல் அதிர்ச்சி அடைந்து தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டான்.

எனவே சகோதரர்கள் தாங்கள் செய்ததை அவனுக்கு அறிவித்தார்கள். அவர்களெல்லாரும் சேர்ந்து தங்கள் தகப்பனிடம் சொல்ல ஒரு கதையை உருவாக்கினார்கள். ஒரு ஆட்டைக் கொன்று அதின் இரத்தத்திலே யோசேப்பினுடைய அங்கியை தோய்த்து அதை தங்கள் தகப்பனிடத்தில் கொண்டு போனார்கள். யாக்கோபு அந்த அங்கியை பார்த்து ‘‘யோசேப்பை ஏதோ ஒரு கொடிய மிருகம் கொன்று போட்டது’’ என்று கூறி அழுதான்.

அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு அநேக நாள் துக்கத்தை தாங்கி கொள்ள முடியாமல் அழுது கொண்டே இருந்தான். யாக்கோபு இருதயத்தின் ஆழத்திலிருந்து தன் மகனுக்காக துக்கித்துக் கொண்டே இருந்தான். அவன் “என் குமாரனாகிய யோசேப்பின் மரணத்தினிமித்தம் நான் துக்கத்துடனே மரிப்பேன்’’ என்றான்.

யோசேப்பு எகிப்துக்கு சென்றவுடன் அவனை வாங்கியவர்கள் போத்திபார் என்பவனிடத்தில் அவனை விற்றுப் போட்டர்கள். அவன் பார்வோனுடைய காவலாளிகளுக்கு தளபதியாய் இருந்தான். யோசேப்பு அடிமை வாழ்க்கைக்கு தன் மனநிலையை தயார் செய்து கொண்டான். அவன் செய்வதையெல்லாம் தேவன் ஆசீர்வதித்தார். அவன் தன் திறமையிலே வளர்ந்து தன் எஜமானனுடைய மரியாதையைப் பெற்றுக் கொண்டான்.

சீக்கிரத்திலே போத்திபார் தன் வீட்டுக் காரியங்களிலும் தனக்குண்டான எல்லாவற்றின் மேலும் யோசேப்பை அதிகாரியாக வைத்து அவற்றை அவன் வசம் ஒப்புவித்தான். யோசேப்பு நல்ல அழகான கட்டு கோப்பான வாலிபன் ஆனான். ஒரு நாள் போத்திபாரின் மனைவி யோசேப்பை கண்டு தன்னோடு சயனிக்க கூப்பிட்டாள். ஆனால் யோசேப்பு, ‘‘அது என் எஜமானுக்கும்,தேவனுக்கும் நான் செய்கிற பெரிய பாவமாயிருக்கும்’’ என்று கூறி மறுத்து விட்டான்.

ஆனாலும் அவளுக்கு கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் அவள் முயற்சி செய்து கொண்டே இருந்தாள். அவனோ அதை மறுத்துக் கொண்டே இருந்தான். ஒரு நாள் எஜமான் வெளியே போயிருந்த

சமயத்தில் வீட்டிலே மனிதர்கள் இல்லாத நேரத்தில் அவள் அவனுடைய வஸ்திரத்தை பற்றிப் பிடித்தாள். அவன் அவள் பிடியிலிருந்து தப்பிக்க முயற்சித்த போது தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப் போனான்.

இது அவளுக்கு அதிக கோபத்தை உண்டாக்கியதால் அவனை பழிதீர்க்க நினைத்தாள். எனவே அவள் சத்தமாக அலறினாள். அதை கேட்டு வீட்டு மனிதர்கள் எல்லாம் அவளிடம் வந்தார்கள், அப்பொழுது அவள் பயங்கரமான பொய்யைச் சொன்னாள். ‘‘யோசேப்பு என்னோடே சரசம்பண்ணும்படிக்கு வந்தான். நான் அலறியவுடனே வெளியே ஓடி போனான் ‘‘என்று தன்னுடைய கையிலிருந்த யோசேப்பின் வஸ்திரத்தை அதற்கு சாட்சியாக காண்பித்தாள். அவள் கணவன் வீட்டிற்கு வந்த பின் அதே கதையைச் சொன்னாள். போத்திபார் கோபம் மூண்டவனாகி யோசேப்பை பிடித்து ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையிலே அவனை அடைத்தான்.

இது யோசேப்பைப் போல் இருக்கிற சாதாரணமாண வெளி தேச அடிமைகளை வைக்கிற இடமல்ல. ஆனாலும் தேவனுடைய கரம் அவன் மேலிருந்தது. அதை தொடர்ந்துவரும் பாடங்களிலும் பார்க்க இருக்கிறோம். யோசேப்பை போல கடினமான பாதைகளின் வழியே நாம் நடந்தாலும் தன்னுடைய பிள்ளைகளின் வாழ்விலே தேவனுக்கு என்று ஒரு திட்டம் இருக்கிறது என்பதை இந்தப் பாடம் விளக்குவதினால் இது முக்கியமானது.

அவர் தன் பிள்ளைகளுடைய வாழ்க்கையை குறித்து ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அதை அவர் மறப்பதில்லை, நிறைவேற்றாமல் இருப்பதுமில்லை. அவர்களுக்கு வாக்குத்தத்தங்களை கொடுக்கிறார். நமக்குள்ளாயிருந்த விசுவாசத்தையும், தெய்வ நம்பிக்கையையும் அதிகப்படுத்தும் படியாக தேவன் கடினமான பரீட்சைகளை நமக்குக் கொடுக்கிறார் என்பதே இந்த பாடத்தின் முக்கிய சத்தியம். அவர் தன்னுடைய பிள்ளைகளை மறப்பதில்லை கைவிடுவதுமில்லை.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளியுங்கள்.

1. யோசேப்பினுடைய முதல் கனவினை பற்றி அவன் சகோதரர்கள் என்ன நினைத்தார்கள்? (6 வினாடிகள் தாமதிக்கவும்)

‘யோசேப்பு தங்களை ஆளப் போகிறான் என்பதை கற்பனை செய்து கூட பார்க்க முடியாமல் கோபம் கொண்டார்கள்’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. சொப்பனக்காரனை அழித்து விட வேண்டும் என்ற யோசேப்பின் சகோதரர்களின் முதல் திட்டம் என்ன? (6 வினாடிகள் தாமதிக்கவும்)

   ‘அவனைக் கொன்று இந்தக் குழிகளில் ஒன்றில் எறிந்துவிடுவோம்’ என்பதே முதல் திட்டம் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. யோசேப்பு போத்திபாரின் மனைவியோடு பாவம் செய்ய ஏன் சம்மதிக்கவில்லை? (6 வினாடிகள் தாமதிக்கவும்)

   ‘அது தன்னுடைய எஜமானுக்கும் தேவனுக்கும் செய்கிற பெரிய பாவம் என்று சொல்லி அதை மறுத்தான்’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தப் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இதுவரைக்கும் யோசேப்பை பற்றி அறிந்திராத ஒருவரிடத்தில் இந்த பாடத்தை பகிர்ந்து கொள்ளவும். இந்த பாடத்தை சொல்லி முடித்த பிறகு யோசேப்பு போத்திபாரின் மனைவியால் சோதனைக்கு உட்பட்ட போது அவனுடைய பதில் என்ன என்று கேளுங்கள். அவன் யாருக்கும் தெரியாது என்று சொல்லியிருந்திருக்கலாம். ஆனால் அவனோ நான் என் எஜமானுக்கும் தேவனுக்கும் விரோதமாக எப்படி பாவம் செய்வேன் என்று மறுத்தான்.

நம்முடைய பாவங்களை தேவனுக்கு மறைக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? நாம் செய்கிற நன்மை தீமை எல்லாவற்றையும் தேவன் பார்க்கிறார்.

பாடம் முடிந்தது